நீதி நூல்கள்

அதிவீரராம பாண்டியர்

இயற்றிய

வெற்றி வேற்கை (நறுந்தொகை)

இந்நூலை இயற்றியவர் கொற்கை நகரத்திலிருந்து ஆட்சி புரிந்த அரசர் அதிவீரராம பாண்டியன் என்பவர். இவர் பாண்டிய மரபினர். இவரை தென்காசிப் பாண்டியர் என்றும் கூறுவர். இவருடைய ஆட்சிக் காலம் 11-12ம் நூற்றாண்டு எனத் தெரிகிறது. இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர். குருமூலமாக சிவ தீட்சை பெற்ற சிவபக்தர். இவர் இயற்றிய பிறநூல்கள் நைடதம், இலிங்கபுராணம், காசிக் காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி போன்றவை. இவருடைய சகோதரர் புலவர் வரதுங்க ராம பாண்டியன்.

கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே.

நூல் பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கையாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றம் களைவோர் குறைவிலாதவரே!

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

வாழ்த்து

வாழிய நலனே; வாழிய நலனே!
(சில பிரதிகளில் இப்பாடல் காணப்படவில்லை)

நூல்

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும் 1

கல்விக்கு அழகு கசடு அற மொழிதல் 2

செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் 3

வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும் 4

மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை 5

வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல் 6

உழவர்க்கு அழகு ஏர்உழுது ஊண் விரும்பல் 7

மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் 8

தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை 9

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல் 10

பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல் 11

குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல் 12

விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல் 13

அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல் 14

வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை 15

தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே 16

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே 17

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர் 18

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர் 19

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர் 20

உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர் 21

கொண்டோ ர் எல்லாம் பெண்டிரும் அல்லர் 22

அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது 23

சுடினும் செம் பொன் தன் ஒளி கெடாது 24

அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது 25

புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது 26

கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது 27

அடினும் பால் பெய்து கைப்பு
அறாது பேய்ச் சுரைக்காய் 28

ஊட்டினும் பல் விரை உள்ளி கமழாதே 29

பெருமையும் சிறுமையும் தான் தர வருமே 30

சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே 31

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

சிறியோர் பெரும் பிழை செய்தனராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிது 32

நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே 33

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே 34

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே 35

கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே 36

நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே 37

எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை மேல் வருக என்பர் 38

அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும் 39

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்று 40

யானைக்கு இல்லை தானமும் தருமமும் 41

பூனைக்கு இல்லை தவமும் தயையும் 42

ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும் 43

சிதலைக்கு இல்லை செல்வமும் செருக்கும் 44

முதலைக்கு இல்லை நீத்தும் நிலையும் 45

அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை 46

நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை 47

கேளும் கிளையும் கெட்டோ ர்க்கு இல்லை 48

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா 49

குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர் 50

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக் கூழ் சாலை அடையினும் அடைவர் 51

அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆள்வர் 52

குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர் 53

எழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்கு
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும் 54

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் கூடி
நெற்பொலி நெடு நகர் ஆயினும் ஆகும் 55

மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்து தம் கொழுநரைத்தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர் 56

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே 57

இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே 58

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லாம் இல்லை இல் இல்லோர்க்கே 59

தறுகண் யானை தான் பெரிது ஆயினும்
சிறு கண் மூங்கில் கோற்கு அஞ்சுமே 60

குன்றுடை நெடும் காடு ஊடே வாழினும்
புன் தலைப் புல்வாய் புலிக்கு அஞ்சுமே 61

ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்
தேரை பாம்புக்கு மிக அஞ்சுமே 62

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும் புலி வாழும் காடு நன்றே 63

சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன் தேர் குறவர் தேயம் நன்றே 64

காலையும் மாலையும் நான் மறை ஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே 65

குடி அலைத்து இரந்து வெங்கோலோடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே 66

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

முதல் உள பண்டம் கொண்டு வாணிபம் செய்து
அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே 67

வித்தும் ஏரும் உளவா இருப்ப
எய்த்து அங்கு இருக்கும் ஏழையும் பதரே 68

தன் மனையாளைத் தாய் மனைக்கு அகற்றிப்
பின்பு அவள் பாராப் பேதையும் பதரே 69

தன் மனையாளைத் தன் மனை இருத்திப்
பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே 70

தன் ஆயுதமும் தன்கையில் பொருளும்
பிறன் கையில் கொடுக்கும் பேதையும் பதரே 71

வாய் பறையாகவும் நாக்கு அடிப்பாகவும்
சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின் 72

பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய் போலும்மே மெய் போலும்மே 73

மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே 74

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

இருவர் தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர் தம்
மனமுற மறுகி நின்று அழுத கண்ணீர்
முறை யுறந்தேவர் மூவர் காக்கினும்
வழி வழி ஈர்வதோர் வாளாகும் மே 75

பழியா வருவது மொழியாது ஒழிவது 76

சுழியா வரு புனல் இழியாது ஒழிவது 77

துணையோடு அல்லது நெடு வழி போகேல் 78

புணை மீது அல்லது நெடும் புனல் ஏகேல் 79

ஏழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலாதன கொடு முயல்வு ஆகாதே 80

வழியே ஏகுக வழியே மீளுக 81

இவை காண் உலகிற்கு இயலாமாறே 82

வெற்றி வேற்கை முற்றிற்று

*****

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com